செ.வெ.எண்: 695 /2016 நாள்: 03.10.2016

# பத்திரிகை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டத்திற்கு புறப்பாக குழந்தைகள் தத்தெடுத்தல் மற்றும் கொடுத்தலை தவிர்க்கும் பொருட்டு அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் பின்வரும் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

1. பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக கருதப்படும் 18 வயதிற்கு உட்பட்ட பெண் குழந்தைள் மகப்பேறு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனை நிர்வாகம் உடனடியாக கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் குழந்தைகள் நலக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும்.
2. கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் எந்த ஒரு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் குழந்தை தத்துகொடுத்தல் சட்டத்திற்கு புறம்பாக நடைபெறக் கூடாது. குழந்தை தத்து கொடுத்தல் இளைஞர் நீதிச்சட்டம் 2015 ன் படி "மத்திய குழந்தைகள் தத்தெடுப்பு வள நிறுவனத்தின் வழிகாட்டுதலின் படியே நடைபெற வேண்டும்.
3. மருத்துவமனைகளில் கைவிடப்பட்ட குழந்தைகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நலக்குழுவிற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.
4. கீழ்கண்ட மாநில தத்தெடுப்பு நிறுவனத்தின் முகவரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நலக்குழுவின் முகவரி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் பொதுமக்கள் பார்வையில்படுமாறு எழுதி வைக்க வேண்டும்.

| தத்து மையமுகவரி | குழந்தைகள் நலக்குழு முகவரி |
|---|---|
| சரணாலயம்,<br>திருநெல்வேலி சமூக சேவை சங்கம்,<br>தத்து மையம்,<br>எண் : 283.∴2A, பாபுஜி நகர்,<br>திருநெல்வேலி. | குழந்தைகள் நலக்குழு<br>3-வது தளம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் மேற்கூறிய விதிகளை உடனடியாக நடைமுறைபடுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**